அடர்ந்த கூந்தல்! அடர்ந்த கூந்தல்!!

கருமையும், செழுமையும், ஸ்திரிகளுக்கு
அழகையும் அதிகப்படுத்துகிறது.

அப்படிச் செய்வது அசாத்தியமான காரியமல்ல.

எங்கள்

மணித் தைலம்

போதுமானது.

தற்காலம் வெளிவந்துலாவும் நவீன தைலத்தைப்போல் நமது தைலத்தை எண்ணிவிடக்கூடாது. நமது தைலம் சாஸ்திரோக்தமாகத் தயார் செய்யப்பட்டிருக்கிறது. இந்த மணித்தைலம் நமது ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயத்தில் சுமார் 35 வருஷமாய் விற்பனையாகி வருகிறது. இதைவிட உங்களுக்கு என்ன அத்தாட்சி வேண்டும்? இன்னும் சந்தேகமாயின் நூற்றுக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களில் ஒன்றாகிய கீழ்கண்டதை வாசித்துப் பாருங்கள்.

அன்புள்ள ஐயா!

ஒரு மாசத்திற்குமுன் தங்களிடமிருந்து தருவித்த மணித்தைலம் அற்புத குணத்தைக் கொடுத்து வருகிறது. இன்னும் 5 புட்டி மணித்தைலமும், ஒரு டப்பி ஆ. நி. மாத்திரையும் வி. பி யில் அனுப்பவும்.

ஸ்ரீ. வாசுதேவராவ், வக்கீல்,
(பெசவாடா) மர்காப்பூர்.

இந்தப் பரிமளமிகுந்த வாசனைத்தைலம் புட்டி 1-க்கு விலை ரூபாய் 1.

இந்தத்தைலம் மனோற்சாகத்தைக் கொடுக்கிறது. ஸ்நானத்திற்குச் சுகந்தருவது.

வைத்திய சாஸ்திரி
மணிசங்கர் கோவிந்தஜி,
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்
157, பிராட்வே, மதராஸ்.

Registered No. M 520.

சக்கரவர்த்தினி.

" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவோர்
மற்றீண்டு வாரா நெறி".

VOL 14. தொகுதி 14. | November & December 1918. நவம்பர் – டிசம்பர் 1918. | NO-4-5. பகுதி-4-5.

பொருளடக்கம்

		பக்கம்
1. தீவினையச்சம்.	...	65
2. பாலர்ப்பயிற்சி.	...	71
3. பக்தி.	...	77
4. சுகாதாரம்.	...	83
5. நீதிசாரம்.	...	86
6. தனபதி.	...	90
7. நீள்வாலன்.	...	97

கோ. வடிவேலுசெட்டியாரவர்களால் சென்னை, கோமளேசுவரன் பேட்டை, சச்சிதானந்த அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

சக்ரவர்த்தினி.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி".

VOL - 14 } November & December - 1918. { No - 4-5.
தொகுதி - 14 } நவம்பர் - டிசம்பர்மீ 1918. { பகுதி-4-5.

நாலடியார் வசனம்.

13 - வது தீவினையச்சம்.

அஃதாவது தீவினையைச் செய்தற்கு அஞ்சுதலாம். தீவினை—தீமை பயத்தற் கேதுவாய தொழிலாம். உலகியலின் தன்மையையுள்ளவா றறிந்தவரன்றி மற்றவர் தீவினைசெய்தற் கஞ்சாமையான், அவ்வியைபு பற்றி இது மெய்ம்மையின் பின் வைக்கப்பட்டது.

*மாமிச முண்பவர் வயிற்றிற்கும் சுடுகாட்டிற்கும்
வேற்றுமை யின்றெனல்.*

(1) சுடுகாடுகள் துக்கந்தரும் காரியங்களைச் செய்வதன்கண் நிலைபெற்று நின்று துறவற மார்க்கத்தின்கண் செல்வதில்லாத மக்களது பிணங்களை யுடையனவாம்; (ஆனால்) விஷய வுணர்ச்சி யில்லாத புல்லறிவாளர்களது வயிறுகளோ நெருங்கிய விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் சுடுகாடுகளாக விருப்பனவாம்.

துறவறத்தா ரிறந்த பின், அவருடம்பு தக்கதோ ரிடத்தில் சமாதியில்வைத்துப் பூசிக்கப்படுதலின், சுடுகாட்டிற்குக் கொண்டு போகப் படுவதில்லையாமென்க. பிராணிகளைக் கொல்லா விரதிய ராயும் புலாலுண்ணா விரதியராயு மிருப்பவர் துறவறத்தாரன்றி, இல்லறத்தாரல்லர்; அவர் பெரும்பான்மையும் தீவினைசெய்வ

ரென்பது இங்குணர்த்தியவாறும். புல்லறிவாளர்-சுருங்கிய வறிவுடையவர். சுருங்கியவறிவு-செய்யத்தக்கதிது, செய்யத்தகாதது என்று பகுத்துணர்தலில்லாத அறிவாம். விலங்கு - ஆடு, மாடு, மான் முதலியனவாம்; பறவை-கோழி, கொக்கு, காடை, கௌதாரி முதலியனவாம்.

(க-து.) சுடுகாடுகள் மக்களது பிணங்களை யுடையனவாம்; மாம்ச முண்பவரது வயிறுகளோ விலங்கு பறவை மீன் முதலியவற்றின் பிணங்களை யுடையனவாம்; ஆகவே அவையும் சுடுகாடுகளே யாமென்பதாம்.

கௌதாரி முதலியவற்றைப் பிடித்துக் கூடுகளி லடைத்து வைப்பவர் அடையும் பயனைக்கூறல்.

(2) வண்டுகள் (தேனுண்ணுதற் பொருட்டுச் சூழ்ந்து) சப்திக்கின்ற காட்டகத்திருந்து வாழும் கௌதாரியையும் காடையையும் (பிடித்து) கூடுகளிலிருக்கும்படி (அவற்றில்) கொண்டு வந்து வைப்பவர் (அடுத்த பிறப்பில்) இருப்புகள் சப்திக்கும் கால்களை யுடையவராய், தம் பகைவர்க் கடிமையாய், கருமை வாய்ந்த பெரிய விளைநிலத்தில் சேர்ந்து வேலைசெய்து வருத்த முறுவர்.

கருமை வாய்ந்திருத்தல் - (கரிய) சேறு நிறைந்திருத்தல், இருப்பு - இரும்பாற் செய்த விலங்கு.

காடை கௌதாரி முதலியவற்றைப் பிடித்துக் கூடுகளி லடைத்து வைப்பது பெரும் பாபச் செயலாமென் றிங்குணர்த்திய வாறும்.

(உ-து.) காடை, கௌதாரி, கிளி முதலியவற்றைப் பிடித்துக் கூடுகளி லடைத்து வைப்பவர் மறு பிறப்பில் காலில் விலங்கிடப்பட்டு, தம் பகைவர்க்கடிமையாய், சேறு நிறைந்த விளைநிலத்தில் வேலை செய்து துன்புறுவ ரென்பதாம்.

நண்டு தின்பவரடையும் பயன்கூறல்.

(3) முற்பிறப்பில் நண்டை (உண்ண) விரும்பி (அதனது) கால்களை முறித்துச் (சமைத்துத்) தின்ற பழவினை (தன் பயனைத் தர வந்துவிடத்து, (அவ்வாறு தின்றவர்) சங்குமணிபோல வெண்மையாகத் தம்) அகங்கை யொழிய, (மற்ற) விரல்களெல்லாம் அழுகப்பெற்று துக்கத்தைத் தருகின்ற தொழுநோய்க்கு(ஆளாய்) அலைந்து வருந்துவர்.

தின்ற பழவினை-தின்றதனாலுண்டாய பூர்வ கர்மம். தொழு நோய்-பிறர் கண்டு வருத்தமுற் றிரங்கிக் கைகுவித்துத் தொழத் தக்க நோய்; அது பெரு வியாதியாம்.

(க-ரு.) நண்டையுண்ண விரும்பி அதனது கால்களை முறித்துச் சமைத்துண்பவர் மறு பிறப்பில் குஷ்டநோய் கொண்டு, அலைந்து வருந்துவரென்பதாம்.

தீவினை செய்வாரோடு சேர்பவர் தம் நன்னடை தவறி
தீவினை செயவாரெனல்.

(4) நெய்போன்று (குளிர்ச்சி தருவதாகிய பொருளும் நெருப்பினது உஷ்ணத்தைச் சேருமாயின், (உடம்பினை) எரிக்குமாறு சுட்டு துன்பத்தை விளைவிக்கும் நோயை (தன்னை யடைந்தவர்க்கு) உண்டாக்குவதாம்; (அதுபோல) நல்வினை செய்வதின்கணின்று) தவறாதவரும் தீவினை செய்பவரைச் சார்ந்தொழுகுவாராயின், (தமது நல்லொழுக்கத்தினின்றுந்) தவறி மிகத் தீவினை செய்பவராவர்.

நெய் போன்று குளிர்ச்சி தரும் பொருள் நெருப்பின் சம்பந்தத்தால் சூடுதருவதாதற்போல, நல்லொழுக்க முடையார் தீயொழுக்க முடையாரது சம்பந்தத்தால் தீயொழுக்க முடையவராவரென விளக்கியவாறும்.

(க-ரு.) நல்வினை செய்பவர் தீவினை செய்வாரோடு கூடின், தாமும் தீவினை செய்பவராவர்; ஆகலின், நல்வினை செய்பவர் தீவினை செய்வாருடன் கூடாதிருத்தல் வேண்டுமென்பதாம்.

பெரியாரோடு கொள்ளும் நட்பு வளரும், சிறியாரோடு கொள்ளும்
நட்புத் தேயுமெனல்.

(5) (ஒருவர்) பெரியவரோடு நட்பு (கொள்வாராயின், அது) விண்ணில் செல்லுகின்ற பிறைமதிபோலக் கிரமங் கிரமமாக ஒவ்வொரு நாளும் வளர்ந்து வருவதாம்; சிறியாரோடு நட்பு (கொள்வாராயின், அது) நிறைமதிபோல கிரமங் கிரமமாக ஒவ்வொரு நாளும் தானே தேய்ந்து விடுவதாம்.

பெரியார்-கல்வி, கேள்வி, அறிவொழுக்கங்களால் மேம்பாடுடையார்; சிறியார்-அம் மேம்பாடில்லாதார். பிறைமதி - மூன்றாம் பிறைச் சந்திரன்; நிறைமதி - பூரணச் சந்திரன். தேய்தல்-குறைதல்.

பிறைமதி முன்னர்ச் சிறிதாய்த் தோன்றிப் பின்னர்ப் பெரியதாய்த் தோன்றுவதுபோல, பெரியார் நட்பு முன்னர்ச் சிறிதாய்த் தோன்றிப் பின்னர்ப் பெரிதாய்த் தோன்றும்; நிறைமதி முன்னர்ப் பெரிதாய்த் தோன்றிப் பின்னர்ச் சிறிதாய்த் தோன்றுவதுபோல, சிறியார் நட்பு முன்னர்ப் பெரிதாய்த் தோன்றிப் பின்னர்ச் சிறிதாய்த் தோன்றுமென விளக்கியவாறும்.

(க-து.) பெரியாரோடு கொள்ளும் நட்புப் பிறைமதிபோல வளர்ந்துவரும். சிறியாரோடு கொள்ளும் நட்பு நிறைமதிபோலக் குறைந்துவரு மென்பதாம்.

எவரையும் நன்காராய்ந்து சிநேகித்தல் வேண்டும்;
அவ்வாறு செய்யாவிடத்துத் தீவினை யுண்டாகும்;
அதற் கஞ்ச வேண்டுமெனல்.

(6) (நடிப்பு மாத்திரத்தால் சான்றோர்போன் றிருப்பவரைக் கண்டு, மயங்கி இவர்) சான்றோரென்று கருதி (அவரைச்) சேர்ந் தொழுகுகின்றவனே! (அவ்வாறு) சேர்ந் தொழுகுகின்றவனுக்கு (நீ) சேர்ந்தவரிடத்துச் சான்றாண்மை யில்லையென்று தோன்றுமாயின், (அவர்களைச்) சேர்ந் தொழுகுகின்றவனே! (அதற்கு யான் கூறும் உண்மையைக்) கேட்பாயாக; (அது) ஒருவன் இப்பரணியினுள்ளே கலவைச் சாந்திருக்கிறதென்று கருதி (அதனைத்) திறந்து அப்பரணியினுள்ளே பாம்பினைக் கண்டாற் போல்வதாம்.

சான்றோர்-குணங்கள் பலவற்றால் நிறைந்தவர்; சான்றாண்மை-குணங்கள் பலவற்றால் நிறைந்து, அவற்றை யாளுந் தன்மை.

இஃதொரு பண்டிதன் தீக்குணமுடையாரை நற்குணமுடையாரென்று ஆராயா துணர்ந்து நட்புக்கொண்ட ஒருவனை நோக்கிக் கூறியதாம்.

ஒருவன் இவர் சான்றோரென வறிந்து தான் சேர்ந்தவரிடத்துத் தீக்குணங்களைக் கண்டு நடுங்குதல், கலவைச் சாந்துள்ளேயிருக்கின்றதென வறிந்து ஒரு பரணியைத் திறந்தவர் அதனுள்ளே பாம்பைக் கண்டு நடுங்குதல் போல்வதாமென்று விளக்கியவாறறிக.

(க-து. சான்றோ ரல்லாதாரைச் சான்றோரென விபரீதமாக வுணர்ந்து, அவரைச் சேர்ந் தொழுகுகின்றவர் பல துன்பங்களை

யடைவர்; அதனால் எவரையும் பலகால் ஆராய்ந்தறிந்தே சேர்ந் தொழுக வேண்டுமென்பதாம்.

மக்கள் கருத்தை யுணர்வதரிதாகலின், எவரையும் நம்பி மோசம்போதல் கூடாதெனல்.

(7) மலைச்சாரலிலே பொன்னு மிரத்தினங்களு மிருந்து விளங்குகின்ற நாட்டையுடைய அரசனே! (யான் கூறுவதைக்) கேட்கக் கடவாய்; மக்கள் மனத்திலெண்ணுவது ஒன்றாக விருக்கின்றது; செய்வதோ மற்றொன்றாக விருக்கின்றது. (அதனால்) ஒருவரது மனக்கருத்தை யாராய்ந்தறியுந் தன்மையுடைய வேறொருவர் யார்? (எவருமில்லை; அதனால் எவரையும் நம்பி மோசம்போதல் கூடாது).

இஃதொரு பண்டிதன் ஓரரசனை நோக்கிக் கூறியதாம்.

(க-து.) மக்கள் நினைப்பதொன்றும், செய்வதொன்றுமா யிருத்தலின், எவரையும் அவர் செய்கையைக் கண்டு நம்பி விடுதல் கூடாது; நம்புதற்கு மிக அஞ்சுதல் வேண்டுமென்பதாம்.

வஞ்சகரது நட்பு வருத்தத்தைத் தருவதாகலின், அவரோடு நட்புச் செய்தற்கண் அஞ்சவேண்டு மெனல்.

(8) அருவி நீர் மாறாதிருந்து மணலைக் கொழித்துச் சேற்றினைப் போக்குகின்ற மலைநாட்டரசனே! (ஒருவரோடு) மனத்தினால் நட்புச் செய்யாது, உறுதியான தொழிலைச் செய்பவர்போல (இருந்து) வஞ்சகமாக நட்புச் செய்தாருடைய பெரு நட்பானது (அவரது) மனத்தின்கண் குற்றமுடையதா யிருக்கும்.

இஃதொரு பண்டிதன் ஓரரசனை நோக்கிக் கூறியதாம்.

குற்றமுடையதாதல்-தீமை செய்யும் நோக்கமுடையதாதல்.

(க-து.) ஒருவரோடு மனமிசைந்து நட்புச் செய்யாது, அவர்க்கு நன்மை செய்வதுபோல விருந்து நட்புச் செய்பவரது நட்பு அவர்க்குப் பின் துன்பத்தைத் தருவதாம். அதனால் அவரோடு நட்புச் செய்தற்கு அஞ்சுதல் வேண்டுமென்பதாம்.

கல்வி யறிவில்லார்க்குச் செய்யு முதவி தன்னைச் செய்பவர்க்கு இம்மையிலும் மறுமையிலும் துன்பந் தருவதாக விருத்தலின், அவர்க்குதவி செய்தற்கண் அஞ்ச வேண்டுமெனல்.

(9) (ஒருவன் தன் பகைவரை வெட்ட) வீசிய சிறந்த வாளாயுதம் அப்பகைவரது கையிலகப்பட்டு விடுமாயின், (அஃது

அவனது) உற்சாகத்தைக் கெடுத்து விடுவது நிச்சயமாம். (அங்ஙனமே ஒருவன் கல்வி யறிவில்லாதவர்க்குச் செய்த உபகாரம் அவனை) இம்மையிலும் மறுமையிலும் (பாவ வடிவாய்ச்) சென்று வருத்துவது நிச்சயமாம்; அதனால், அக்கல்வி யறிவில்லாதவரிடத்தினின்றும் விலகி யிருப்பது (ஒவ்வொருவர்க்கும்) நற்காரியமாம்.

ஒருவன் தன் பகைவனை வெட்ட ஓங்கிய வாள் அப்பகைவனிடத்து அகப்பட்டவிடத்து அதற்கு மிக வஞ்சுவதுபோல, ஒவ்வொருவரும் தீவினையாளர்க்குச் செய்யு முபகாரத்திற்கு மிக வஞ்ச வேண்டுமென விளக்கியவாறும்.

இம்மை-இப்பிறப்பு; மறுமை—வருபிறப்பு.

(க-து) கல்வி யறிவில்லாதவர் பழிபாவங்களுக் கேதுவாய செயல்களைச் செய்வதற்கு அஞ்சாராதலின், அவர்க்கு உபகாரஞ் செய்தற்கண் ஒவ்வொருவரும் மிக வஞ்சுதல் வேண்டும்; உபகாரஞ் செய்தாலோ அஃது இம்மைக்குரிய பழியாயும் மறுமைக்குரிய பாவமாயும் நின்று தன்னைச் செய்தவரை வருத்தும்; ஆதனால் அவரினின்றும் நீங்குதலே ஒவ்வொருவர்க்குந் தகுதியாய செயலென்பதாம்.

செய்த நன்றல்லால், பிறிதொன்று உயிர்க்கு உற்ற துணை
யாவதின்மையின், ஒவ்வொருவரும் நற்கருமம் செய்யா
திருப்பதற்கன்றி, அதனை விரைந்து செய்ய வேண்டுமெனல்.

(10) மனமே! (நீ) மனையாளிடத்து (வைத்துள்ள) பிரியத்தை நீக்காதிருக்கின்றாய்; மக்களுக்கு (காணி மனை முதலியவற்றைத் தேடி வைக்க வேண்டும்) என்று (கருதி ஒவ்வொரு நாளும் ஏக்கமுற்றிருக்கின்றாய்; (இவ்வாறுள்ள நீ) எவ்வளவு காலம் வாழ்வாயோ? (அதனை யெனக்குக் கூறுவாயாக). எவ்வளவாவது அற்ப காலத்திலேயானாலும் (நீ) செய்த நற்காரியமே யல்லாமல், உயிர்க்குப் பொருந்திய பயனோ (பிறிதொன்று) இல்லை.

இஃதொரு பண்டிதன் தன் வாழ்நாள் வீணாகக் கழிந்தமை பற்றிவருந் தன் மனத்தை நோக்கிக் கூறியதாம்.

(க-து.) மனைவியின்மீது வைத்துள்ள ஆசை நீங்காதும் மக்களுக்குப் பொருள் சேர்த்துவைக்க வேண்டுமென்னும் கவலை யொழியாது மிருத்தல் உயிர்க்குற்ற துணையாக விருப்பதில்லை;

செய்யும் அறம் மிக வற்பமாக விருப்பினும் அதுவே அதற்குற்ற துணையாக விருப்பதாம்; ஆதலால், ஒவ்வொருவரும் அறத்தைச் செய்யாதிருத்தற்கஞ்சி, அதனைக் கூடுமானவரையுஞ் செய்ய முயலல் வேண்டுமென்பதாம்.

பாலர் பயிற்சி.

முன்னுரை.

சிறப்புடன் சீரும் பெற்று வாழவேண்டுமென்று நினையாதார் யார்? யாருமில்லை! ஆயினும், சிறப்புடன் சீரும் பெற்று வாழவேண்டின் ஒருவன் என்ன செய்தல் வேண்டும் என்பது அதிக உலக அனுபவம் உடையவர்களுக்கும், நற்சாஸ்திரானுபவம் உடையவர்களுக்குமன்றி மற்றவர்களுக்கு விளங்குவதில்லை. தற்காலம் இந்தியாவில் அநேக சீர்திருத்தக் காரர்கள் பலவித சங்கங்களை யேற்படுத்தி, பல நன்மைகளைச்செய்து வருகிறார்கள். தீமைகளைச்செய்யும் சங்கங்களும் உண்டு. நிற்க, இந்தியா தேசம் மேன்மையடைய வேண்டுமாயின், முதன் முதல் நமது சிறுவர்கள் சீர்திருத்தப்படல் வேண்டும். இச்சீர்திருத்தம் மற்றெல்லா வித சீர்திருத்தங்களைக் காட்டிலும் அவசியமானதும், முதன்மையானதும், அவைகளுக்கு அஸ்திவாரம் போன்றதுமாம். நாளைய தினம் (எதிர் காலத்தில்) நாம் அனுபவிக்கும் நன்மையும் தீமையும், இன்றையதினம் (நிகழ்காலத்தில்) நாம் செய்யும் கர்மங்(தொழில்)களிலிருந்தே உண்டாகின்றன. இதை விளக்குவது "முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்" என்னும் கொன்றைவேந்தன் வாக்கியமாம். நாமெல்லாம் விருத்தியடைய விரும்புகிறோம். நமது சந்ததிகளையும் விருத்தி யடையும்படி செய்ய விரும்புகிறோம். அதற்கு வேண்டிய சாதனங்களையும் தெரிந்துகொள்வோமாயின், நம்மெண்ணம் நிறைவேறுவதாம்.

பாலரின் மன வியல்பு.

சிலர் "குழந்தையின் மனம் யாதொரு நன்மை தீமைகளுமில்லாதது; சேர்க்கையினால் அதன் குணாகுணங்களமைகின்றன" என்பர். நாயனாரும் "நிலத்தியல்பால் நீர்திரிந்தற்றாகு—மாந்தர்க்கு, இனத்தியல்பதாகு மறிவு" என்றனர். அதன்

பொருள்: "மழைநீர் யாதோரு ருசியும் இல்லாமலிருந்தும் அது தான் விழுந்த நிலத்தின் குணத்தை யடைவதுபோல, மனிதர்களுடைய அறிவு அவர்கள்சேரும் இனத்தின் குணத்தை யடைகின்றது" என்பதாம். வேறு சிலர் "குழந்தையின் மனதை நம்மால் மாற்றமுடியாது; பிறக்கும்போதே நன்மை தீமைகள் அதன் மனதில் அமைந்திருக்கின்றன. குழந்தையின் மனம் அநேக ஜன்ம அனுபவத்தை யுடையதா யிருக்கிறது" என்பர். இதிலும் கொஞ்சம் உண்மை உண்டு. சில குழந்தைகளை எவ்வளவு படிப்பித்தாலும் அவைகளின் மண்டைகளில் ஏறுவதில்லை. சில குழந்தைகள் குழந்தைகளா யிருக்கும்போதே முதியவர்களெல்லாம் அதிசயிக்கக்கூடிய யுக்தி யோசனைகளோடு கூடிய நல்லறிவை யுடையனவா யிருக்கின்றன. இதை யோசிக்கும்போது குழந்தைகளின் மனதில் முன்சென்ம அனுபவங்களினால் அறிவினுடைய இளமை முதுமை பேதங்க ளேற்பட்டிருக்கின்றன என் நாம் யூகிக்கவேண்டியதா யிருக்கின்றது.

கர்ப்பத்தி லமைய நன்மைகள்.

ஒரு குழந்தை இப் பூவுலகில் பிறந்த பிறகுதான் அதன் நன்மைக்குரிய காரியங்களை நாம் செய்ய முடியும் என்று நினைத்தல் கூடாது. குழந்தை கருவில் தரிக்கா முன்னேயும், கருவில் தரித்தது முதற் கொண்டுமே நாம் நடத்திக் கொண்டுவரும் காரியங்களும் குழந்தையின் சரீர அமைப்பையும் மன அமைப்பையும் பாதிக்கக் கூடியனவா யிருக்கின்றன. பலஹீனமாயும் நோயால் பீடிக்கப் பட்டவர்களாயு முள்ள வநுவரர்களுக்கு, பலமும் சுகமு முடைய சந்ததி யுண்டாத லரிது. துராசை, கோபம், மூர்க்கம் முதலிய தீய குணங்களால் பீடிக்கப்பட்ட மனமுடையவர்களுக்கு சாந்தம், அமைதி முதலிய நற்குணங்களுடைய சற்புத்திரன் பிறத்தலரிது. குழந்தைகள் பிறப்பதற்கு முன்னமே அவைகளின் நன்மையைக் கோரி நாம் செய்யக்கூடிய பல காரியங்க ளுண்டென்பது "பிரஹ்லாதாழ்வார், சுகர் முதலியோர் கர்ப்பத்திலேயே ஞானோபதேசம் பெற்று, பிறக்கும்போது ஞானிகளாய்ப் பிறந்தன" ரென்று புராணங்கள் கூறுவதை யுற்று நோக்குவோர்க்கு நன்கு விளங்குவதாம். இவ்விதமான முன் ஜாக்கிரதைகளினால் குழந்தையின் சரீரத்தை யனுசரித்த மட்டில்தான் நாம் நன்மைகளை யெதிர்பார்க்க முடியுமென்று சிலர்

எண்ணலாம். அது தவறு. தத்துவ சாஸ்திர ஆராய்ச்சியுடையார் மனதையும் ஒரு பதார்த்தமா (சடப் பொருளா) கவே கொண்டிருக்கின்றனர். நமது தேகம் எப்படி ஒரு பதார்த்தமோ அப்படியே மனமும் ஒரு பதார்த்தந்தான், ஆனால் தேகம் தூல பதார்த்தம் (Grosser matter) மனம் சூக்ஷ்ம பதார்த்தம் (Finer matter). இது மாத்திரமல்ல. சூக்ஷ்ம பதார்த்தங்களி லிருந்தே தூல பதார்த்தங்க ளுண்டாகின்றன வென்பது உபநிடத உண்மையாம். ஆதலின் நாம் ஒரு குழந்தை பிறக்கு முன்னமேயே அதனுடைய மனச் சீர் திருத்தத்திற்காகவும் சாந்தம், பணிவு, தயாளம், வீரம் முதலிய நற்குண முடையவனாகப் பிறக்கும்படிக்கும் நாம் பிரயத்தனப் படலாம். "தகப்பனைப்போலப் பிள்ளை, தாயைப்போலப் பெண் (As is the father so is the son)" எனும் முது மொழியை நீங்களெல்லாம் கேட்டிருப்பீர்கள். அது நமக்கு என்ன தெரிவிக்கின்றது? அநேகமாய் நமக்கெல்லாம் பழமொழிகள் அநேகம் தெரியும். அதன் உண்மைப் பொருளின்னதென்று நாம் யோசித் தறிவதுமில்லை; அதன்படி நடப்பதுமில்லை. பெற்றோர் எம்மாதிரி நடவடிக்கைகளை யுடையவர்களாக விருக்கின்றனரோ அதே நடவடிக்கைகளை யுடையனவாகவே அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளு மிருக்கும்.

ஆதலால், உங்கள் குழந்தைகள் திடசரீர முள்ளவைகளாக விருக்கவேண்டுமாயின், குழந்தைகளைப் பெறப்போகின்ற நீங்கள் உங்கள் சரீரங்களைத் திட முள்ளவைகளாகச் செய்து கொள்ளுங்கள். தீர்க்காயுளுடைய மக்களைப் பெற விரும்பியவன் யோகம் (பிராணாயாமம்) செய்யவேண்டுமென்று யோக சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுளது. பிராண பந்தனமாகிய யோகத்தைப் பழகுவாரது வீரியம் மிக சுத்தமும் திடமுமானதாம். உங்கள் சந்ததிகள் வீரமுள்ளவர்களா யிருக்கவேண்டுமாயின், உங்களிடத்தில் வீர மிருக்கட்டும். உமது மக்கள் சாஸ்திர நிபுணர்களா யிருக்கவேண்டின், நீங்கள் சாஸ்திரங்களைக் கையாளுங்கள். அவர்கள் கைத்தொழிலில் வல்லவர்களா யிருக்க விரும்பின் நீங்கள் கைத்தொழிலைப் பழகுங்கள்; வியாபாரிகளா யிருக்க விரும்பின், அதைப் பழகுங்கள். நீங்கள் கோபிகளாக—புருஷனும் பெண் சாதியும் சண்டை போட்டுக்கொண்டு இருந்தால் உங்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் கோபிகளாக சண்டை போட்டுக்கொண்

டே இருக்கும். நீங்கள் பிறரிடத்தில் அன்புள்ளவர்களாயும், சாந்தமும் அமைதியு முள்ளவர்களாகவு மிருங்கள்; உங்கள் சிசுக்களும் அப்பெருங்குண முடையனவாய்ப் பிறக்கும். குழந்தை பிறந்த பிறகு செய்யும் பிரயத்தினங்களைக்காட்டிலும் அது கர்ப்பத்திலிருக்கும்போது செய்யும் பிரயத்தனங்களும், அதைக் காட்டிலும் கர்ப்பத்திற்கு முன்னரிருந்தே செய்யும் பிரயத்தினங்களும் குழந்தையின் சீர்திருத்த விஷயத்தில் முறையே ஒன்றிலொன்று அதிக பயன் தருவனவாம்.

குழந்தைப் பருவம்.

குழந்தைகளைப் பெற்றெடுத்த பிறகு அவைகளிடத்து நாமெப்படி நடந்துகொள்ள வேண்டும்? முன் மேற்கோளாகக் காட்டிய திருவள்ளுவர் வாக்கை ஞாபகப்படுத்திக்கொண்டு நம்முடைய நடத்தைகளினால் குழந்தைகளுடைய நடத்தையை நன்மையுள்ளனவாக அமையும்படி செய்தல்வேண்டும். ஏனெனில், சேரியில் பிறந்த குழந்தை தனது தமக்கையை "யக்கா" என்றும், உயர்குலத்துப் பிறந்த குழந்தை "அக்கா"என்றும் அழைப்பது எதனால்? இவைகள் தமது தாய் தந்தையர்கள் வழக்கிலிருந்து குழந்தைகள் கற்றுக்கொள்ளவனவாம். "தொட்டிற் பழக்கம் கட்டோடே"யாதலின் நல்லநடவடிக்கைகள் இளமைப் பருவத்திலேயே அமைக்கப்படல் வேண்டும். இவ்விஷயத்தில் அநேகமாக 'கற்றுக்கொடுக்க நினைவதைவிட நடத்திக்காட்டுவதே நலம்'.— குழந்தையைச் சுற்றிலும் அன்பையும், சாந்தத்தையும், அமைதியையும் உண்டாக்கக்கூடிய வஸ்துக்களை நிறைந்திருத்தல்வேண்டும். வீட்டின் சுவர்களில் வீரம், ஜீவகாருணியம் முதலியசற்குணங்களைப் புகட்டக்கூடிய படங்களை வைத்திருந்து, குழந்தைகள் அவற்றைப்பார்த்து இவை யென்னவென்று கேட்கும்போது, சிறிய கதைகளாக அவர்களுக்கு நற்குணங்களைப் போதிப்பது நலம். காதல், கோரம் முதலியவைகளைக் காட்டும் படங்கள் அவர்கள் கண் முன் இருத்தல்கூடாது. கெட்ட குணங்களுடைய பிள்ளைகளோடாவது பெரியோர்களோடாவது தங்கள் குழந்தையைப் பழக விடலாகாது. இருபது வயதுள்ள ஒருவர் தமது மைத்துனர் பிள்ளையை விளையாட்டாக "கண்ணு! பீடி பிடிக்கிறையா? தம்படி கொடுக்கிறேன்" என்று சொல்லி அக்குழந்தைவாயில் ஒரு புது பீடியை வைத்துக் கொளுத்தும்

போது நான் கண்டிருக்கிறேன். அப்படிச் செய்கிற அவர்களுக்குக் குழந்தையைக்கெடுத்துவிட வேண்டுமென்றஎண்ணம் கிடையாது; அவர்கள் அதை விளையாட்டாகச் செய்கிறார்கள். ஆனால், அதனால் நேரிடும் கெடுதிகளுக்கு யார் உத்தரவாதம்? சிறுவயதில் குழந்தைகளுக்கு (வெளியிலிருந்து) இனத்தினால் அமையும் குணங்களே அக்குழந்தைகளின் வாழ்நாள் முற்றும் மாறாமல் நிற்கும் என்பதைப் பெற்றோர்கள் நன்றாயறிதல் வேண்டும். குழந்தைகளிடத்திலாவது, குழந்தைகளின் முன்னிலையிலாவது, கடுமையான வார்த்தைகளையும் அசங்கதமான வார்த்தைகளையும் பேசுதல்கூடாது. கோபமும் வஞ்சகமு முள்ளதாகப் பிறந்த ஒரு குழந்தையின் குணம், பெற்றோர்கள் சாந்தமாகவும் பெருந்தன்மையாகவும் நடந்து காட்டலால் மாற்றப்பட்டுப்போம். குழந்தை மதலைச்சொல் பேசுவதைக் கேட்க விரும்பும் சில பெற்றோர்கள் அல்லது உறவின் முறையார் அவைகளின் வாயில் 'மணியென மின்சொல்' பலவற்றை வருவித்துக் கேட்டானந்திப்பதைவிட்டு மற்றவர்கள் வாயிலிருந்துவரின் தாங்களே வெறுக்கும் அசங்கிதமான சொற்களைச் சொல்லிக்கொடுத்துக் கேட்டனுபவிப்பது அநாகரீகமான வழக்கமாம். பெரியவர்களானபொழுது அக்குழந்தைகள் அவ்வார்த்தைகளை எப்படி மறந்துவிடும்? அப்பொழுது 'எய்தவனை நோவாமல் அம்பை நோவதுபோல்' சொல்லிக்கொடுத்த தங்களை நோவாமல் தங்களிடம் கற்றுக்கொண்டதையே பேசும் அச்சிறுவர்களை நோவதும் பெற்றோர்க்கழகோ? ஒரே கிளியின் இரண்டு குஞ்சுகளுள் தவசிவளர்த்தது கண்டவர்களையெல்லாம் 'வாரும்! உட்காரும்! பழம் சாப்பிடுகிறது தானே' என்றும், கசாப்புக்காரன் வளர்த்த மற்றொன்று 'வெட்டு, குத்து, கூறுபோடு' என்றும் உபசரித்தும் வருத்தியும் வழங்கியதென்னே? கடுமையான வார்த்தைகளும் அதட்டுதலும் பெற்றோர்களாற் கையாளப்படின் குழந்தைகளினிடத்துக் குற்றங்கள் அதிகரித்துக்கொண்டே வரும். மேலும் குற்றங் களைவதற்காக அவைகளுபயோகப் படுத்தப்படின், குழந்தைகள் குற்றங்களை மறைவாகச் செய்யக் கற்றுக்கொள்ளும். பிறகு, அவர்கள் என்ன குற்றங்கள் செய்கிறார்கள் என்பதே நம்மால் அறிய முடியாமற் போய்விடும். குழந்தைகள் அன்பிலே பிறந்து, அன்பிலே வளர்ந்து, அன்பினால் திருத்தப்படல் வேண்டும். இப்படி வளர்ந்த குழந்தை சாந்தமும், பணிவும், உண்மையு முள்ளதாயிருக்கும். வீட்டில்

அடிவாங்காத குழந்தைப் பள்ளிக்கூடத்தில் அடிவாங்குவதில்லை. நீங்கள் குழந்தைகளுக்கு எதை யெதைக் கற்பிக்க விரும்புகிறீர்களோ அதையெல்லாம் அன்பினால் கற்பியுங்கள். குழந்தை தவறுசெய்தால் தண்டித்தல் கூடாது. குழந்தைகள் தவறு செய்வது இயற்கை யென்று சிலர் நினைப்பதும் தவறு. குழந்தைகள் சுறுசுறுப்புள்ளவைகள். அவை சரியான வழியில் உபயோகப் படுத்தும்படி நாம் வழி காட்டாவிட்டால் அச்சுறுசுறுப்புத் தவறான வழியில் செல்லுவதியற்கை. மிக்க துடுக்கான பையனொருவனிருப்பானாயின் அவனை நாம் மிகு சுறுசுறுப்புடையவனும்கூரிய புத்தியுடையவனுமாக அறிந்துகொள்ளல் வேண்டும். வயதிற் சிறுமையும் வயதிற் பெருமையுமே தண்டித்தற்குக் காரணமாகாது. நீங்கள் எவ்வளவு தவறு செய்கிறீர்கள்? உங்களை யார் தண்டிப்பது? தவறு செய்தவன் காரணம் அறியாமையே. அறியாமையை நீங்கினவன் தவறு செய்வதில்லை. தண்டிப்பது அறியாமையையாவது தவறையாவது நீக்காது. அன்பினால் போதிப்பதே அறியாமையை நீக்குவதாம். தவறு செய்த குழந்தையைப் பார்த்து 'தெரியாமல் செய்து விட்டாய். அல்ல? இனி அப்படிச் செய்யாதே. அது தவறு" என்று அன்பான வார்த்தைகளால் சொல்வது நலம். குழந்தைகள் இடக்கான வார்த்தைகளைக் கற்றுக்கொண்டு வந்து சொல்லும்போது வேறு விஷயத்தினால் அதை மறந்துவிடும்படி செய்தல்வேண்டும்; அது இடக்கான வார்த்தை யென்று அறிந்து சொல்லுமானால், அது தவறென்றும் இனி அவ்விதம் பேசலாகாதென்றும் இழிவிரக்க அதிசயக் குறிப்புச் சொற்களோடுகூடிய அன்பான வார்த்தைகளால் குழந்தைக்குச் சொல்லுதல் நன்மை பயப்பதாம்.

ஒரு ஆங்கில வித்வான் (Dr Rudolph Steiner) தமது சிறுவர் கல்வி என்னும் புஸ்தகத்தில், நாம் 7-வயதுக்குள் குழந்தைகளைத் திருத்தவேண்டுமென்றும், அதற்குமேல் கிஞ்சித்தேனும் திருத்தம்செய்ய முடியாதென்றும் சொல்வதோடு ' குழந்தை வெளியில் ஸ்தூலமாக எது எது நடந்தாலும் அது போலவே செய்கின்றது, ஸ்தூலமாக என்பதற்கு 'குழந்தை பார்க்கிறதும், அதைச்சுற்றி நடக்கிறதும், குழந்தையின் மனதை இழுக்கக் கூடியதுமாகிய' எல்லாவற்றையும் பொருளாய்க் கொள்ளல் வேண்டும். ஆகையால் குழந்தையைப் பரிபாலிப்போர் (பெற்றோர்

அல்லது வளர்ப்போர்) எப்பொதும் சந்தோஷமாய் இருத்தல்வேண்டும்; குழந்தையினிடத்து உண்மையான அன்பைக்காட்டவேண்டும். இப்படியிருந்தால் குழந்தை சரியான வழியில் வரும். இப்படியே தான் அதனுடைய நல்நடவடிக்கைகளும் அமைகின்றன. புத்தி புகட்டக்கூடிய புஸ்தகங்களாவது கதைகளாவது அவ்வளவு நன்மை செய்யாது. பெரியோர் நடந்து காண்பிப்பது தான் குழந்தைக்குப்படியும்" என்கிறார். இவர் சொல்வதெல்லாம் "விளையும் பயிர் முளையிலே" என்னும் பழமொழியின் வியாக்கியானமாம். சரியான எருப்போட்டுத் திடமாக வளர்க்கப்படாத நாற்று கொழுமையானநிலத்தில் நடப்படினும்பயன்றருவதில்லையாம், அதுபோல குழந்தையிலே திருத்தப்படாவிடின் பிற்காலத்தில் ஒருவன் பெருந்தன்மையும் மென்மையுமுள்ளவனாக ஆவதில்லை. இளமையிலே வளைக்கப்பட்ட மூங்கில் தான் பல்லக்கிற்கு உதவும்.

(இன்னும் வரும்).

ச — கந்தசாமி முதலியார்.

பக்தி.

(முன் தொடர்ச்சி)

சிறுவர்கள் பந்து முதலியன ஆடுவது போல மிகப் புகழ் படைத்த அரசர்களும், சக்ரவர்த்திகளும் ஒவ்வொரு மாதிரியாகக் களிப்படைவதுபோலக் கடவுள் இப்ரபஞ்சத்தைக்கொண்டு விளையாடுகின்றனர். அவர் முழுமுதற்கடவுளாகும்; அவர்க்கு யாதொன்றும் வேண்டியதில்லை. அவர் எதன் பொருட்டு உயிர்களைப் படைக்கின்றார்? நம்மிடத்து மனவெழுச்சி யுண்டாவது ஏதேனுமொரு விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்வதன் பொருட்டே; ஒன்று தேவையென்ற விருப்பம் எவ்விடத்துண்டோ அங்கு நிறைவு—பரிபூர்ண நிலைமை வரவில்லை யென்றுபொருள். கடவுள்-யாதொரு குறைவுமற்று-எல்லாம் நிறைந்தவர்; அவருக்கு வேண்டியதொன்றுமில்லை; பின்னெதற்காக வேண்டி அவரெப்பொழுதும் இந்தப் படைப்புத்தொழிலைக் கைக்கொண்டிருக்கின்றனர்? அதனாலவர்க்கென்ன பயன்? இன்னின்ன கருத்தோடு

தான் கடவுள் உலகத்தைப் படைத்தார். என்றிப்படித்தோன்றுகின்ற நமது எண்ணங்கட்கேற்றவாறு பொருத்தமாயுண்டாக்கியுள்ள கட்டுக்கதைகளெல்லாம், கதைகளுடைய நிலைமையில் முதற்றரமானவே. அதற்குமேலவற்றினின்று நமக்கு ஏற்றுக்கொள்ள வேண்டியதாய் யாதொன்றுமில்லை. படைப்புத்தொழிலெல்லாம் உண்மையில் விளையாட்டின் பொருட்டேதான்; ப்ரபஞ்சமே அவரது விளையாட்டாலுண்டானது தான். ப்ரபஞ்சம் முழுவதுமவரது ஒருபெரிய பொழுதுபோக்காயிருக்கின்றது. ஆதலால் நீங்கள் வறிஞராயிருப்பினும் அதையொரு பொழுதுபோக்காய்க் கருதி இன்பமாயிருங்கள். நீங்கள் செல்வமுடையவர்களாயிருப்பின், செல்வமுடையவனென்ற பொழுதுபோக்கை யடைந்து இன்பமடையுங்கள்; துன்பம் நேர்ந்ததானால் அதுவுமொரு பொழுதுபோக்கே; செல்வம் வந்ததானாற் சிறிது நீண்டநேரம் போக்கு; உலகமுழுவதும் நம்முடைய விளையாடுமிடம்; இதில் நமக்குப் பலவித வேடிக்கைகளும் பலவாறான பொழுதுபோக்குகளுமுண்டு. கடவுள் நம்மோடுகூட எப்பொழுதும் விளையாடிக்கொண்டிருக்கின்றார். நாமுமவரோடு கூடிக்கொண்டு எப்பொழுதும் விளையாடிக்கொண்டிருக்கின்றோம். அவர் நமது நிலைத்த தோழனாகும். ஆ! அவர் எவ்வளவு அழகாய் விளையாடுகின்றார்! இப்பொழுது விளையாட்டு முடிவடைந்துவருகிறது. "கால சக்ரம்" ஒருமுறை சுற்றிச் சுழன்று திரும்பிவிட்டது; இனி, சிறிது பொழுது இளைப்பாறுதலாகும்; அதன் பிறகு விளையாட்டு மறுபடியுந் தொடங்கும். * ப்ரபஞ்சம் முழுவதும் விளையாட்டு மட்-

---

'அவ்யக்தா த்வ்யக்தயஸ்ஸர்வ: ப்ரபவந்த்யஹராகமே, ராத்ர்யாகமே ப்ரலீயந்தே, தத்ரைவா வ்யக்த ஸம்ஜ்ஞகே'' ''பூதக்ராமஸ்ஸ ஏவாயம் பூத்வா பூத்வா ப்ரலீயதே, ராத்ர்யா கமேவசப்பார்த்த ப்ரபவத்யஹராகமே''.

(ஸ்ரீமத் பகவத்கீதை அத்-8-ச்லோ-18, 19).

" கடவுளுடைய பகற்பொழுதில் கண்ணுக்குத் தென்படாததான நுண்ணிய பொருளி (ஸூக்ஷ்ம ப்ரக்ருதியி) லிருந்து, வெளிப்படையாய்க் கண்ணுக்குத்தோன்றுகின்ற (ஸ்தூல) ப்ரபஞ்சங்கள் எல்லாம் உண்டாகின்றன. இரவில், காணப்படாததெனப்படும் அந்த நுண்ணிய பொருளிடத்திலேயே அடங்குகின்றன." "ஓ! பார்த்தா! உயிர்க்கூட்டமானது அதன் வினைக்கேற்ப பகற்பொழுது தொடங்கும்பொழுது உண்டாகிறது; இரவு வருகையில் அடங்குகிறது. அதுவே தோன்றித்தோன்றி மறைகிறது". (எல்லாவுயிர்களும் ப்ரளயம் வரும்பொழுது நுண்ணிய பொருளிலடங்கி

டுமேயென்றும் அதில் நீங்களுங்கூடச் சேர்ந்திருக்கின்றீர்களெ ன்ற செய்தியை நீங்களெப்பொழுது மறக்கின்றீர்களோ அப்பொழுது காலனுங்களுக்குத் துன்பமுண்டாகின்றது; அப்பொழுது உங்கள் உள்ளத்தில் பெருந்த கவலை தோன்றுகின்றது. உலகு முழுவதுந் துன்பமயமாகவுந் தோன்றுகின்றது. ஆனாலுடனே உள்ளத்தை மாற்றி, இப்பொழுது கூட நிலையற்றதான இந்த உயிர், நிலை (மெய்) யானதென்ற எண்ணத்தை வெறுத்தொதுக்குக; இது நாம் விளையாடுவதற்கான ஒரு இடம் மட்டுமே என்று கருதுக; நம்மோடு விளையாட நிலையான தோழனொருக்கடவுளிருக்கிறாரென்றும் நம்புக; அந்நொடியில் உங்களுடைய துன்பங்களெல்லாம் பறந்துவிடுகின்றன; அவர், மிக நுண்ணிய பொருள்களெல்லாவற்றிலுமிருந்து விளையாடுகின்றார்; பூமி, ஸூர்யன், சந்த்ரன், நக்ஷத்ரங்களிவ்வாறு அளவற்ற கோடிக்கணக்கான ப்ரஹ்மாண்டங்களைப் படைக்கும்பொழுதும், அவர் விளையாடிக்கொண்டேயிருக்கின்றனர்; அவர் அணுவினுள்ளதிலிருந்து விளையாடுகின்றனர்; எல்லாவுயிர்களுடன் ஒற்றுமையாய் விளையாடுகின்றனர் என்று மட்டுமில்லை. "சராசர"மான இப்ரபஞ்சம் முற்றிலுமவர் விளையாடுகின்றார். நாமனைவருமவர் ஆடுகின்ற சதுரங்கத்தின் காய்களாகும். அவர் காய்களையெல்லாம் பலகைமேல் வைத்து நகர்த்துகின்றார். காய்களாயிருக்கின்ற நம்மை அவர் ஒருபொழுது ஒரு மாதிரியாக நிறுத்துகின்றார்; மற்றொருபொழுது மற்றொரு வகையாய் ஆடுகின்றார். அறிந்தோ அறியாமலோ நாமனைவருமவரது விளையாட்டிற்கு உதவியாயிருந்து

மறைந்தும், படைப்புக் காலத்தில் வெளிப்படையாகத்தோன்றியும், வருகின்றதென்று பொருள்).

"ஸர்வ பூதாநி கௌந்தேய ப்ரக்ருதிம் யாந்தி மாமிகாம், கல்பக்ஷயே புனஸ்தானி, கல்பாதௌ விஸ்ருஜாமயஹம்" "ப்ரக்ருதிம் ஸ்வாமவஷ்டப்ய விஸ்ருஜாமி புனப்புன:, பூதக்ராமமிதம் க்ருத்ஸ்ந மவசம் ப்ரக்ருதேர்வ, சாத்"

"ஓ! குந்தியின் மைந்தா! ப்ரளய காலத்தில் எல்லாவுயிர்களும், என்னுடைய மாயை (யில், லயத்தை) யடைகின்றன. தோன்றும்பொழுது வந்தது யானவற்றை மறுபடியும் தோற்றுவி (ஸ்ருஷ்டி)க்கின்றேன்" "என்னுடைய மாயையை உதவியாகக்கொண்டு பழைய வினைக்கேற்ப இவ்வெல்லா உயிர்க் கூட்டங்களையும் மறுபடி, மறுபடி முன்வினையைப் பின்பற்றியே தோற்றுவிக்கின்றேன்." (பகவத்கீதை அத்-9-ச்லோகம் 7-8.)

வருகின்றோம். நாமனைவரு மவரது தோழர்களாகும்! மிகப்பேரின்பம்!!

மிக நன்றாயிருக்கின்ற இந்த உயர்ந்த நட்பை இனி மற்றொருவகையாலுங்கூட நன்கு விளக்குவோம். அது "இனிமை" என்று தெரியவருகின்றது; அது தான் மிகவு முயர்ந்ததாயிருக்கின்ற நிலைமை. உலகத்திலுள்ள எல்லா நட்பினைக்காட்டிலும், மிகவுந்தூயதாயும், மேலானதாயுமுள்ள காதலே இதன் பிறப்பிடம். காதலி, காதலர்களிடத்துள்ள அன்பைப்போன்ற வல்லமை மற்றெந்த நட்பிலுண்டு? மனிதரது இயல்பு முற்றிலும் ஒன்றாக உருக்கிச் சேர்த்து மாற்றும் வல்லமை வேறு எந்த அன்பிற்குண்டு? வேறெந்தக் காதல், உடலின்கணுள்ள எல்லாப் பரம அணுக்களிற்கூட மிக விரைவிற் சென்று பாயும் வல்லமை யுடையது? வேறெந்த நட்பு தான் ஒருவரைப் பைத்தியம் பிடித்தவராய்ச் செய்து தீர்ப்பது? ஒருவரைத் தனக்குத் தானே மெய்ம்மறக்கச் செய்வது? எந்த நட்பு மனிதனை (அந்த நட்பின் மாறுதல்களுக் கேற்றவாறு) ஒரு தேவனோ, அல்லது ஒரு ராக்ஷஸனோ ஆக்கித் தீர்ப்பது? மிக நன்றா யிருக்கின்ற நட்பின் இந்த இனிமையான நிலைமையில், கடவுளே நமது காதலன் அல்லது தலைவனாகத் தான் கருதப்பட் டிருக்கின்றது. நாமனைவரும் மங்கையர் ஆகும்; இவ்வுலகில் ஆண்மக்கள் யாருமில்லை; புருஷனாயுள்ளவரொருவரே யுண்டு; அவர் நம்முடைய காதலுக் கிருப்பிடமான கடவுள் மட்டுமே. இங்குக் காதலிக்குக் காதலனிடத்தோ, காதலனுக்குக் காதலியிடத்தோ உள்ள விருப்பமெல்லாங் கடவுளிடத்துச் செலுத்தித் தீரவேண்டியதாகும். உலகத்தில் நாம் காண்பதும் சற்றேறக்குறைய அடைந்து வருவதுமான பலவாறான நட்புகட்கும் மேலான எல்லை கடவுளே யாகும். ஆனால், அன்பாகின்ற மிகப் பெரிய ஆறு, விருப்பமென்னுங் கடலை நோக்கியே தான் எப்பொழுதும் பெருக்கெடுத் தோடிக் கொண்டிருக்கின்றது. இவ் விஷயத்தை மனித ரறியா திருப்பது நிர்ப்பாக்கியமே; ஆதலாலவன் இந்த உயர்ந்த நட்பை யறிவின்மையால் மனிதப் பாவை (பொம்மை)களிடத்தில் செலுத்துகின்றான். இயற்கையாகவே மனிதர்க்கு அவரவரது குழந்தைகளிடத்து "வாத்ஸல்ய" வடிவமா யிருக்கின்ற ஒரு பெரிய காதல் பாவையின் நிலைமையிலுள்ள மக்களின் பொருட்டென்று கருதாதீர்கள். நீங்க ளனைவ

ரும் உங்களது மக்களின் கண்ணைப் பொத்தி விளையாடுவீர்களா யின், நீங்க ளதனால் மிருந்த துன்பமடைய வேண்டி வருமென்ப தற் கையமின்று. ஆனால் அத்தகைய துன்ப நுகர்ச்சியோடு கூட நீங்கள் ஐயமின்றி ஒரு படிப்பினையும் பெறுவீர்கள். உங்க ளிடத்தி லிருக்கின்ற அன்பை ஒரு தனி உயிரில் மட்டுஞ் செலு த்துவீர்களாயின், அதன் பயனாக நீங்கள் ஒருபொழு தில்லா விடின் ஒரு பொழுது தடையின்றித் துன்பத்தை யடைந்தே தீர வேண்டுமென்ற பாடத்தை நீங்க ளறிந்து கொள்கின்றீர்கள். ஆத லால் நாம் நமது அன்பை அழிவற்றதாயும், தொழிலற்றதாயு மிருக்கின்ற அந்தக் கடவுளிடத்திலேயே செலுத்த வேண்டிய தாகும். அன்புக் கடலா யிருக்கின்ற அக் கடவுளிடத்து ஏற்றமா வது, தாழ்வாவது, ஒன்று (மொரு பொழுது) முண்டாகின்ற தில்லை. உண்மையில் கடத்தற் கரியதான அன்புக் கடலா யிருக் கின்ற அக் கடவுளிடத்திலேயே நம்முடைய அன்பெல்லாம் பாய்ந் தோட வேண்டியதுதான். எல்லா ஆறுகளுங் கடலில்தான் ஓடிப் போய் விழுகின்றது. மலையுச்சியிலேதா னிருந்ததாயினும், ஒரு துளி நீரும் அங்கிருந்து வழிந்தோடி ஓர் ஆற்றிற் கலந்ததெனில், அது கடலைப்போ யடையா திருப்பதில்லை. நமது உள்ளத்தின் எல்லாவித மாறுதல்கட்கும் முடிவான எல்லை கடவுளே யாகும். நீங்கள் பகைக்க வேண்டி வந்தால் கடவுளையே பகைக்கின்றீர் கள்; நீங்கள் இகழ வேண்டுமாயினும், உங்களது அன்பிற் கிருப் பிடமானவரும், உங்கள் காதலருமா யிருக்கின்ற கடவுளையே இகழ்கின்றீர்கள். அவ்வளவு உறுதியோடு கூட வேறு யாரைத் தான் நீங்க ளிகழ்ந்து கூற முடியும்? ஒரு மனிதன் உங்கள் கோபத்தைப் பொறுமையோடுகூடத் தாங்குவதில்லை; அக்கோபம் ஐயமின்றி அவனிடத்தினின்றும் ப்ரதிபலிக்கின்றது. நீங்கள் என்னோடு நேரே கோபித்துக் கொண்டால் அக் கோபம் உடனே என்னிடத்திலிருந்து ப்ரதிபலிக்கின்றது. ஏனெனில் உங்களு டைய கோபத்தைப் பொறுமையோடு தாங்கிக்கொள்ள என்னால் முடிவதில்லை. உங்கள் அன்பிற் கிருப்பிடமா யிருக்கின்ற கடவு ளோடு "எதனால் நீ என்னருகில் வரவில்லை; எதற்காக என்னை நீ தனித்துவிட்டுச் செல்கின்றாய்?" என்றிவ்வாறு நீங்கள் கூறுகின் றீர்கள். அவரிடத்திலன்றி வேறெங்கேதா னின்ப முண்டு? கேவலம் ஒரு மண்ணாங் கட்டிக் கீடான நமது உடலில் என்ன

இன்பமுண்டு ? அளவற்ற இன்பத்தைக் கடைந்தெடுத்த வெண்ணெயைத்தான் நாமடைய வேண்டியது ; அது கடவுளிடத்துத்தான். நமது பொறாமை, பகை முதலிய எல்லா எண்ணங்களையும் அவரிடத்துச் செலுத்துக. அவைகளெல்லா மவரைக் கருதி மட்டுமே யாகும் ; ஏனெனில், மற்றோரிடத்தில் செலுத்தப்பட்டதானல், அவை யெல்லாம் மிக இழிந்தனவாய் விடுகின்றன; ஆனால் வழிதப்பாது அவையெல்லாங்கடவுளிடத்துச்செல்கின்றனவெனில் இயற்கையாகவேமிக இழிந்தவைகளுங் கூட உயர்ந்தனவாய்த் தீர்கின்றன. மனிதரது உள்ளத்தினுலும், உடலினுலுஞ் செய்யப்படுகின்ற எல்லா முயற்சிகட்கும், மேலான உதவி-முடிவான முயற்சி-அல்லது ஒரே மாறுதல்-கடவுளே யாகும். மனித ருள்ளத்திலிருக்கின்ற எவ்வகை நட்புகளும்,விருப்பம், வெகுளி, முதலான எல்லா எண்ணங்களும், தடையின்றிக் கடவுளிடத்தே சென்றடைய வேண்டியனவாம். அவர் தாம் நமக்கு மிகுந்த நட்புடையவர் ; நமது இந்த உள்ளம் வேறு யாரை உண்மையில் நேசிக்கின்றது ? அவர் மிகுந்த அழகு வாய்ந்தவர் ; அவர் மிகுந்த இளமைப் பருவம் வாய்ந்தவர் ; அழகு, இளமை, புகழ் எல்லா மவரே ! இப் பிரபஞ்சத்தில் அவரைக் காட்டிலும் வேறு மாசற்றவர் யாவருளர் ? இப் பிரபஞ்சத்தில் தலைவன் நிலைமையைத் தாங்கும் வல்லமை வாய்ந்தவர் வேறு யாவருளர் ? இப் பிரபஞ்சத்தில் நேசிக்கத் தகுதியானவர் வேறு யாவருளர் ? ஆதலா லவரே தலைமையைப் பெறட்டும் ;" அவரே நமது அன்பிற்குரியவராய்த் தோன்றட்டும் ; இந்த இனிய நட்பைப் போற்றுகின்ற அன்பர்கள் அதனை வர்ணிப்பதற்காக லௌகிக நட்பின் பற்பல நிலைமைகளின் மாறுதல்களையே தகுந்ததாய் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். அறிவிலிகள் இதனைத் தெரிந்துகொள்வதில்லை ; அவர்கள் ஒருபொழுதுந் தெரிந்து கொள்ளவும் முடியாது. அவர்கள் அந்த உயர்ந்த நட்பை வெளிப் பார்வையால் காண்கின்றனர். மிக உயர்ந்ததான இந்த உயர்ந்த நட்பினு லுண்டாகின்ற பைத்தியத்தை அவர்க ளறிந்து கொள்வதில்லை. அவரறிந்து கொள்வது மெப்படி ?

கங்கா ஜடேச சர்மா.

சுகாதாரம்.

பற்களைச் சுத்தம் பண்ணுதல்.

தேகத்தைச் சுத்தமாய் வைத்துக்கொள்ளுகிறவர்கள் தினந்தோறும் நன்றாய்ப் பற்களைச் சுத்தம்பண்ண வேண்டியது அவசியமே. இப்படிச் செய்யாவிட்டால் சுவாசிக்கிற ஆகாயம் அசுத்தமடைந்து நாற்றமுள்ளதாக, சுகத்திற்குப் பிரதிகூலமுண்டாகும். இத்தேசத்து ஜனங்களுள் பெரும்பான்மையோருக்குநாடோறும் பற்களைச் சுத்தம்பண்ண வேண்டுமென்றுசொல்லவேண்டிய அவசியமில்லை. ஆனால் அவர்களுள் அநேகர் செங்கற்பொடி, காடு முரடான சாம்பல், பலமுள்ள பற்குச்சி முதலானவைகளைக் கொண்டு தினந்தோறும் வெகுநேரமாகப் பற்களை முரட்டுத்தனமாய்த் தேய்க்கிறதினால் சிலவருஷ காலத்திற்குள் பற்களை வெகுவாய்த் தேய்ந்து போகச்செய்து, பின்னுக்குக் கொடிய வேதனைகளை வருவித்துக் கொள்ளுகிறார்கள்; அடுப்புக்கரியையாவது, அல்லது கொட்டைப் பாக்கைச் சுட்ட கரியையாவது கொஞ்சமெடுத்து அதனோடுகொஞ்சம் உப்பைச்சேர்த்து மிகவும் நேர்த்தியான தூளாகப் பொடித்து, அந்தப் பொடியைக்கொண்டு பற்களை மெதுவாய்ச் சுத்தம்பண்ணினால் நலமாயிருக்கும். சில நாளைக் கொருமுறை கொஞ்சஞ் சீனக்காரம், அல்லது படிகார முதலிய துவர்ப்புப் பதார்த்தங்கள் சேர்ந்த தண்ணீரினால் வாயைக் கொப்பளித்தால் பல் நாறு முதலிய வற்றிற்குப் பலமுண்டாம்.

வஸ்திரம்.

மனிதன் தரிக்கும் வஸ்திரங்கள் தேசவித்தியாசம் காலவித்தியாசங்களுக்குத் தக்கபடி வித்தியாசப் பட்டிருத்தல் வேண்டும். அதிக குளிர்ச்சியுள்ள தேசங்களில் வாசம்பண்ணும் ஜனங்கள் மிருகங்களின் தோல்களினாலும் அவைகளின் கம்பளி மயிர்களினாலுஞ் செய்த உடைகளைத்தரித்துக் கொள்ளுவார்கள். உஷ்ண தேசங்களி லுள்ளவர்கள் பருத்தி, பட்டு முதலியவைகளாலாகிய வஸ்திரங்களை உடுப்பார்கள்.

ஜனங்கள் காலவித்தியாசத்திற் கேற்றபடி வித்தியாசமான துணிகளாலாகிய வஸ்திரங்களைத் தரிப்பது தேகசுகத்திற்கு அவசியமான காரியம். குளிர்ச்சி தேகத்தைத் தாக்காதபடிக்கு நன்றாய்

விலக்கத்தக்கது பிளாநெல் முதலிய கம்பளி மயிரினுலாகிய துணிகளே. இவைகளுக்கு இரண்டாவது பருத்திநூல் துணிகள். ஆலண்டுமுதலிய சணல் நாரினுல்செய்ததுணிகள், குளிர்ச்சியைத் தாங்குவதற் கேற்றனவைகளல்ல. நமது தேசத்தில் அதிக குளிர்ச்சி யான காலங்களில் தவிர மற்றக் காலங்களிலெல்லாம் ஜனங்கள் தரித்துக் கொள்வதற்கேற்றது பருத்தி நூல் துணிகளே. அதிக குளிர்ச்சியான காலங்களில் கம்பளித்துணி வஸ்திரங்கள் போர்வை கள் முதலியவைகளே உபயோகப்படுத்துவதுசரீரத்திற்கு ஆரோக் கியத்தை யுண்டாக்குகிறதுந் தவிர குளிர்ச்சியினுல் சுவாசக் கருவி கள் ஜீரணக்கருவிகள் முதலியவற்றைப் பற்றின பலவியாதிகள் அணுகாதபடிக்கு விலக்கும்.

உடைகளின் நிறம்.

வஸ்திரங்களின் நிறத்திற்குத் தகுந்தபடி உஷ்ண மானது தே கத்தைத்தாக்கும். வெள்ளைநிறத் துணிகளின்மேல் படுகிற காங் கையில் அதிகமானபங்கு உள்ளே செல்லாமல் வெளியே திருப் பப்பட்டுச்சிதறிப்போகின்றது. கறுப்பு நிறத் துணிகளோ உஷ்ண த்தை யெல்லாம் உள்ளே உறுஞ்சிக்கொள்ளும். ஆகையால் உஷ்ண காலங்களில் வெள்ளை நிற உடைகள் காங்கையை வெகுவாய் நீக் கும். கருப்பு நிற உடைகளோ உஷ்ணம் அதிகமாய் தேகத்தைத் தாக்கும்படி செய்யும். இதனுல்தான் கறுப்பு நிறத் துணியுள்ள குடைகளை வெயிலில் பிடித்துக் கொண்டு போகும் பொழுது நமக்கு உஷ்ணம் அதிகமாய்த் தோற்றுகின்றது.

பிள்ளைகளின் உடைகள்.

சிறு குழந்தைகளுக்குக் குளிர்ச்சியைத் தாங்குகிற சக்தி மிகவும் அற்பவம். அவர்களுடைய தேக அனலானது அற்ப ஏதுக்களினுல் வேகமாய்க் குறைந்து போகத் தக்கது. இப்படி அவர்கள் தேக அனல் குறைந்துபோனுல் பல அபாயமான நோய் கள் சம்பவிக்கும். ஆகையால் சிறுபிள்ளைகளைத் தகுந்த வஸ்தி ரங்களைக்கொண்டு நன்றாய் மூடிவைத் திருக்கவேண்டும். விசே ஷமாய் குளிர்ச்சியான காலங்களில் பிள்ளைகளை மிகவும் பத்திர மாய்ப் பார்க்கவேண்டும். அக்காலங்களில் பிளானல் முதலிய நல்ல துணிகளினுல் குழந்தைகளைப் பாதுகாக்கவேண்டும். குளிர்காலங் களில் பிள்ளைகளுடைய உடம்பைமாத்திரம் மூடிவிட்டு, பாதம் கால் தலை முதலியவற்றை மூடாமல் வைத்திருப்பது தீமை

யாம். இப்பாகங்களையும் தகுந்தபடி மூடிவைக்க வேண்டும். பிளானல் முதலிய சொறசொறப்பான துணிகளினால் குழந்தைகளுடைய அதிநுட்பமான தோல்தேசப்படாத படிக்கு உள்ளே மிருதுவான பருத்திநூல் வஸ்திரத்தைப் போட்டு அதன் மேல் கம்பளித்துணி உடைகளைப் போடலாம். நமது தேசத்தில் பொதுவாய்ப் பிள்ளைகளை நல்லவஸ்திரங்களைக் கொண்டு பாதுகாக்கிறதில்லை. இதினால்தான் அவர்களுக்கு அடிக்கடி வயிற்றோட்டம் சீதபேதி ஜலதோஷம் இருமல் முதலிய பல வியாதிகளுண்டாகின்றன.

சிறுபிள்ளைகளைப் போலவே, விருத்தாப்பியரும் அஜீரணம் வயிற்றோட்டம் சீதபேதி க்ஷயரோகம் திமிர்வாதம் முதலிய வியாதிகளுள்ளவர்களும் குளிர்ந்த நேரங்களி லெல்லாம் நல்ல வஸ்திரங்களினால் தேகத்தை நன்றாய் மூடிக் கொண்டிருக்க வேண்டும்.

உடைகளின் இறுக்கம்.

நாம் தரித்திருக்கும் உடைகள் தேகத்தின் யாதொரு பாகத்தையாவது இறுக்காமல் போதுமான அளவு தளர்ச்சியாகவே இருக்கவேண்டும். அப்படிக்கில்லாவிட்டால், இறுக்கப்படுகிற பாகத்திலுள்ள இரத்த ஓட்டத்திற்குத் தடை நேரிட்டுப் பல தீமைகளுண்டாம். வயிறு இறுக்கப்பட்டால் ஜீரணத்தொழிலுக்கும், ஜீரணகருவிகளுக்கும் தீமையாம். மார்பு இறுக்கப்பட்டால் சுவாசத்தொழிலுக்கும் சுவாசகருவிகளுக்கும் சேதமாம். கழுத்தில் இறுக்கமுண்டானால் அதிலுள்ள பெரிய இரத்தநாளங்கள் நெருக்கப்பட்ட இரத்த ஓட்டத்திற்குத் தடையுண்டாகி, பெரிய தொந்தரவுகள் நேரிடும். அதிககனமும் இறுக்கமுமான தலைப்பாகைகளினால் தலையிலுள்ள இரத்த ஓட்டத்திற்குத் தடை நேரிட்டுத் தலைநோ யுண்டாகிறதுண்டு.

ஈரவஸ்திரம்.

ஈரவஸ்திரங்களைக் கட்டிக் கொண்டிருப்பதினால் தேகத்திலுள்ள அனல் குறைந்து போகிறதற் கேதுவிருப்பதினால் சுகத்திற்குப் பெரியகேடுகள் சம்பவிக்கும். இத்தேசத்தில் அநேகர் ஆறு, குளங்களில் ஸ்நானம் பண்ணிவிட்டுத் தாங்கள் சுத்தம்பண்ணின ஈரவஸ்திரங்களையே வெகுநேரம் வரையில் தரித்துக்கொண்டிருக்கிறது வழக்கமாயிருக்கின்றது. இதனால் ஜனங்களுக்குத்தெரியாத

படி அநேக அசுகவீனங்கள் சம்பவிக்கின்றன. சிலவேளைகளில் ஜனங்கள் வீட்டைவிட்டு வெகுதூரம் போயிருக்கும் வேளைகளில் மழை முதலான காரணங்களினால் அவர்கள் வஸ்திரங்கள் ஈரமாய்போயினும் அவைகளையே அவர்கள் வீடுவந்து சேருமளவாயில் தரித்துக் கொண்டிருக்கும்படி சம்பவிக்கும். அச்சமயங்களில் அவர்கள் அங்குமிங்குந் திரிந்து, அல்லது விரைவாய் நடந்து தேக முயற்சியினால் சரீர அனலை அதிகப்படுத்திக்கொண்டே இருக்க வேண்டும். இப்படிச் செய்யாமல் ஈரவஸ்திரங்களோடு ஓரிடத்தில் நின்று, அல்லது உட்கார்ந்துகொண்டே இருந்தால் மோசமான சிலவியாதிகள் சம்பவிக்கிறதற்கு ஏது உண்டாம்.

வஸ்திரசுத்தம்.

நமது தேகத்திலிருந்து நிமிஷந்தோறும் புறப்படுகிற வேர்வையிலுள்ள அசுத்தமான கழிவுபதார்த்தங்களும், ஆகாயத்தில் கலந்திருக்கும் பல அசுத்தங்களும் நாம் தரித்திருக்கிற வஸ்திரங்களில் எப்போதும் ஒட்டிக்கொண்டே வருகிறபடியால் நாம் அடிக்கடி வஸ்திரங்களைமாற்றி அவைகளை நன்றாய்ச் சுத்தம்பண்ணிக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அவைகளில் படிந்திருக்கும் விஷபதார்த்தங்கள் தேகத்திற்குள் பிரவேசிக்கிறதற்கு ஏதுவாயிருக்கிறதுந்தவிர சொறி சிரங்கு முதலிய வியாதிகளுண்டாவதற்கும், ஒட்டுவாரொட்டி விஷவியாதிகள் உண்டாகிற காலங்களில் அவ்வியாதிகள் நம்மை லகுவாய் அணுகுவதற்கும் ஏது வாயிருக்கும். சிறுபிள்ளைகளுக்கு உபயோகிக்கிற வஸ்திரங்கள் பீக்கைத் துணிகள் முதலியவற்றைக் கூடியபட்டும் சுத்தமாய் வைத்திருப்பது அவர்களுடைய சுகத்திற்கு மிகவும் அவசியமான காரியம். அப்படிச் செய்யாததினால் பலவகை நோய்கள் அவர்களை அணுகுகின்றன.

நீதிசாரம்.

செய்ந்நன்றி யறிதல்.

(முன்தொடர்ச்சி)

அதிகமாய்ப் பொய்ம்மைக் கிடங்கொடுத்துக் கெட்ட பெயர் பெற்றவனுடைய வாக்கில் அபூர்வமாய்வரும் மெய்ம்மைகூடப் பெருமை பெறாது. எப்படியெனின், ஸௌரபாண்டத்தில் ச்யுதை

யென்னும் அம்ருத மிருக்கின்றதென்றால் ஒவ்வாத்தன்மை போலேதான்.

மெய் பேசுவதனால் எவ்வளவு துன்பம் வருவதாக விருந்தாலும், நல்லோர்கள் அதைவிட்டுப் பொய்க் குட்படார்கள்.

பொய் பேசுவதினாலெவ்வளவு இன்பம் வருவதாக விருந்தாலும், ஸத்யவான்கள் இன்பத்தை விரும்பிப் பொய்பேச வறியார்கள்.

பிறிதோருயிர்க்குந் தீமையைத் தராத சொற்களைச் சொலல் வாய்மையெனவும், குற்றமில்லாத நன்மையைப் பயக்குமாயின் பொய்ம்மையானாலும் வாய்மையோடொத்ததெனவுங் கூறப்பட்டிருப்பதைக் குறித்து புத்திமான்கள் கொள்ளவேண்டிய கருத்தென்னவெனில், பொய்ம்மையால் நன்மையுண்டாகுமாயின் அது தீங்குசெய்யும் பொய்ம்மையைப் பார்க்கிலும் நலமென்பது மாத்ரமே யல்லாமல் வேறில்லை.

ஆதலால், யாவரும் மெய்ம்மை தவறாமலும் பொய்ம்மைக்கிடங்கொடாமலு மிருத்தல் வேண்டும்.

அறன்வலியுறுத்தல்.

மறுமையில் மோக்ஷத்தையும் தேவத்வத்தையும் தருவதாகிய தர்மத்தைவிட மிருந்தசெல்வம் வேறொன்று மில்லையாதலால், தர்மத்தினிடத்துப் புத்தியை நிலைநாட்டிக் கொண்டிருத்தல் வேண்டும்.

தர்மாநுஷ்டானத்தைப் பார்க்கிலும் மேற்பட்ட செல்வமொன்றுமில்லை யென்றும், காமவெகுளி மயக்கத்தால் அதைமறந்துவிடுவதினாலே யுண்டாகிய கெடுதியைப் பார்க்கிலும் வேறொரு துன்பமில்லை யென்றும், முன்னோர்களுரைத்திருக்கின்றார்கள்.

நற்சிந்தை நற்செயல் என்பவைகளே ஒருவனுக்கு தர்மமாகிய நல்வினைகளென்றும், அவைகட்கு விரோதமானவைகளே அவனுக்குத் தீவினைகளாகிய அதர்மங்களென்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றன.

பேராசை கோபம் கடுஞ்சொல் ஆகிய மூன்று குணங்களையும் ஒருவன் தன்னிடத்து வந்து சேரவொட்டாதபடி துரத்திவிடுவதில் அஸமர்த்தனாக விருப்பானாயின், அவனிடத்தில் அதர்மம் நிரந்தரங் குடிகொண்டிருக்கும்.

உயிர்க்குத்துணை தர்மத்தைவிட வேறொன்றுமில்லையென்று சொல்லியிருப்பதால், அதைமறவாமலுடனே செய்தல்வேண்டும்; ஏனெனில் அதனை அந்த்யகாலத்திற் செய்வோமென்று நினைத்தாலக்காலத்தில் நமதுபுத்தி எவ்விதத்தன்மையிலிருக்குமோ அறிந்திலேமென்பதினாலேதான்.

தர்மத்தின்பயனித்தன்மையுடையதென்று நூல்களைக்கொண்டு அறியவேண்டியதே யில்லை. ஏனெனில் சிவிகையைச் சுமக்கின்றவனையும் அதிலேறுகின்றவனையும் பார்த்தால் அநுபவமாகத் தெரிந்துகொள்ளலாகுமென்பதினாலேதான்.

நாம் நல்வினையினாலே ஸுகத்தையும் தீவினையினாலே துக்கத்தையும், அனுபவித்துக்கொண்டிருக்கிறோமென்று நமக்கே பூர்த்தியாய்த் தெரிந்திருக்கின்றது. ஆதலால், இவ்விருவினையில் நல்வினையென்னுந் தர்மத்தை இடையூறில்லாமல் நடத்திவருவோமாயின் அது பிறவித்துன்பத்திற்குக் காரணமாகிய தீயவழிக்கு ஒருதடை கல்லாயிருக்கும்.

ஓ மனமே! அநித்யமான ஶரீரத்தை ஶதமென்று நம்பி தர்மத்தைச்செய்ய மறந்தாய். இறந்துபோவோமென்பதைச் சற்றுமினுங் கருதாமற் போனாய். ஶதமல்லாதவாழ்வை யெந்நாளும் ஶதமென்று நினைத்தாய். இவ்வித நினைப்புள்ள உன்மீது யமன் திரும்புவானாயின் அப்பொழுதென்ன தர்மத்தைச் செய்யமாட்டுவாய்?

ஓ ஜனங்களே! நம்மிடபிடரியினிடத்து எப்போதும் யமன் குடிகொண்டிருக்கிறானென்று அறியுங்கள். அதையறிந்தால் நாமெடுத்த ஜடலம் இன்றைக்கோ நாளைக்கோ எப்பொழுதோ விழுந்து போய்விடுமென்கிற நினைப்புக் கிடமுண்டாகாமற் போகமாட்டாது. ஆதலால் பொல்லாங்கான கார்யங்களுக் கிடங்கொடாமல் விட்டுவிடுங்கள். அவரவர்களுக் கியன்ற மட்டும் நல்விஷயத்தில் சீக்ரத்தில் தர்மங்களைச்செய்து கொள்ளுங்கள். விழிக்குக் காணப்படும் எல்லாபொருளும் நஶித்து விடுமென்றும், தர்மமொன்று மாத்ரமே அழிவில்லாமல் நிற்குமென்றுஞ் சொல்லிய நீதியைக் கருதி நடவுங்கள். ஆலஸ்யமாக விருந்துவிட்டால் வ்யஸனப்படவேண்டியதாக வரும்.

ஓ மூடர்களே! ஆலம்விதை மிகவுஞ் சிறியதாக விருந்தாலுமதை நல்ல நிலத்திலே முளைப்பிக்கச் செய்தாலதுபெரிய வ்ருக்ஷ